செ.வெ.எண்: 80 / மே /2020 நாள்: 27.05.2020

**திருச்சிராப்பள்ளி மாநகரத்தில் அரிஸ்டோ ஹோட்டல் அருகில் உள்ள நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேம்பாலம் அமைக்க பாலம் கட்டப்பட்டு நிறைவு பெறாமல் உள்ளதை, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மை செயலரும், பொதுப்பணித்துறையின் சிறப்பு தூர்வாரும் பணி மற்றும் குடிமராமத்து பணி சிறப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.ஏ.கார்த்திக்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ,ப., ஆகியோர் இன்று(27.05.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.**

----------------

**மேம்பாலப்பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் நேரில் பார்வையிட்டு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:**

திருச்சிராப்பள்ளி மாநகரத்தில் ஜங்சன் அருகில், நெடுஞ்சாலைத்துறையின் மூலம் பாலங்கள் அமைக்கும் பணி நடைபெற்றது. இதில் மன்னார்புரம் செல்லும் சாலையில், பாலம் அமைக்கும் பணி நிறைவு பெறாமல் கடந்த 2 ஆண்டுகளாக உள்ளது. நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அரசு முதன்மை செயலர் திரு.ஏ.கார்த்திக்,இ.ஆ.ப., அவர்கள் பாலம் அமைப்பது தொடர்பாக ஆய்வு செய்தார். விரைவில் பாலம் நடைமுறைபடுத்துவதற்கு பாலம் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளையும் ஆய்வு செய்துள்ளனர். விரைவில் பாலப்பணி தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். 67 சென்ட் நிலம், மாற்று இடம் காவல் துறையின் இடத்தை வழங்குவது தொடர்பாக அரசுக்கு கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் திருச்சிராப்பள்ளி வருவாய் கோட்டாட்சியர் திரு.என்.விஸ்வநாதன், நெடுஞ்சாலைத்துறை கண்காணிப்பு பொறியாளர் திரு.கே.ஜி.சத்தியபிரகாஷ், கோட்டப்பொறியாளர் திரு.வேல்ராஜ், உதவிக் கோட்டப்பொறியாளர் திரு.பி.வீரப்பன், உதவிப்பொறியாளர் திரு.ராஜ்மோகன் ஆகியோர் உடன் உள்ளனர்.

**வெளியீடு:**

**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருச்சிராப்பள்ளி.**